[2003 ஏப்ரல் 10]

225—

பள்ளிக்கூடம் கட்டுதல்

***7306—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடம்பாறையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான மின்சார வாரிய நிருவாகத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வரும் காலியிடத்தில் பழங்குடியினருக்கு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்தும் பள்ளிக்கூடம் கட்டவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பள்ளிக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காடம்பாறைக்குப் பதிலாக பூலுவபபட்டியில் விடுதியுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.கே. செல்வராஜ் அவர்கள்.

திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலே வசிக்கிற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை எல்லாம் செய்ய வேண்டுமானால், வனத் துறையினுடைய ஒப்புதலைப் பெற வேண்டிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. வனத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் Forest Conservation Act-ன்படி அனுமதி வழங்கமுடியாது என்று கூறி வருகிறார்கள். இதனாலே நம்முடைய ஆதிவாசி மக்களுக்குத் தேவையான கட்டடங்களை எல்லாம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது. இன்றைக்கு காடம்பாறைப் பகுதியிலே பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; அதற்குப் பதிலாக பூலுவப்பட்டியிலே கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே பள்ளி இருக்கிற

இடத்திலேயே பள்ளிக்கூடம் கட்டினால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பயன்பெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதே பகுதியிலே பள்ளிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட வனத் துறையினிடத்திலே அனுமதியைப் பெற்று கட்டித் தர முன்வருவாரா? ஏற்கெனவே வனத் துறையைச் சார்ந்தவர்கள் அரசினுடைய நலப் பணிகளைச் செய்வதற்குத் தடையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி இப்படி ஆதிவாசிகள் அதிகமாக வசிக்கிற பகுதிகளிலே, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், காடம்பாறை பழங்குடியினர் மாணவிகள் நலனுக்காக ரூபாய் 34 இலட்சத்தில் பள்ளியுடன் இணைந்த விடுதி கட்டுவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக கடந்த அரசு ஒரு ஆணை வெளியிட்டது. கடந்த அரசால் நிதியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இருந்தாலும், விடுதி கட்டுவதற்கு கட்டுமானப் பொருள்கள் கொண்டு செல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின்படி வனத் துறையினால் அனுமதியளிக்கப்படாத நிலையில், மேற்படி விடுதிக்குப் பதிலாக உடனடியாக அந்தப் பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில்தான், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு அமைந்த உடனே, விரைவாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உத்தரவிட்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், மேற்படி மாவட்டத்தில் பூலுவப்பட்டி என்ற கிராமத்தில் பள்ளியுடன் இணைந்த விடுதி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது அந்தக் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. காரணம் பள்ளி மாணவர்களுடைய நலனுக்காக விரைவாக கட்டி முடிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இப்போது அதன் அருகிலேயே கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 10]

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஜெயராமன்.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடம்பாறை என்பது வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே இருப்பது. பூலுவப்பட்டி என்பது தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே இருப்பது. தொண்டாமுத்தூருக்கும் வால்பாறைக்கும் இடைப்பட்ட பகுதியிலே 50 கிலோ மீட்டருக்கு மேலாக தூரம் உள்ளது. வால்பாறைக்கு அடுத்தபடியாக இருப்பது பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி. பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் ஏராளமான ஆதிவாசிகள் ஆனைமலைக் குன்றினுடைய அடிவாரத்திலே குடியிருந்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, காடம்பாறையிலே ஒதுக்கப்பட்ட நிதியை பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடையகுளம் பேரூராட்சிப் பகுதியிலே வசிக்கிற ஆதிவாசிகளுக்கு பயன்படத்தக்க வகையிலே பள்ளியும், அந்த மாணவர்கள் தங்குவதற்கான விடுதியும் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடம்பாறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி கடந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிதியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஆனால் நிலுவையில் இருந்தபடியால், பூலுவப்பட்டியிலும் கட்ட வேண்டும் என்கிற கோரிக்கை வரப்பெற்றதன் காரணமாக, விரைவாக எங்காவது ஒரு இடத்தில் அந்த நிதியை செலவு செய்ய வேண்டும் என்பதாலும், மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்கிற அடிப்படையில்தான் தற்போது அந்தக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, கருத்தை அரசு ஆயவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *226*, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.